<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3, தாராபுரம்</u>
<u>மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம், தாராபுரம்</u>

**MCOP No. 46/2022** 12.06.2025 **எ.ம.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சையது இப்ராகிம் | தொழில் | சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| த/பெ | | கிராமம் | |
| வயது | | தாலுகா | |
| ஜாதி | | மாவட்டம் | |
| சமயம் | | | |

<u>முதல் விசாரணை</u>

சத்தியமாக சொல்கிறேன். நான் தற்போது தாராபுரம் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். தாராபுரம் காவல் நிலையம் குற்ற எண் 71/21 வழக்கில் தாராபுரம் காவல் நிலையம் போலீசார் புலன் விசாரணை செய்து தாக்கல் செய்த இறுதி அறிக்கை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன்.மேற்படி இறுதியறிக்கையின் உண்மை நகல் சா.சா.ஆ.1. மேற்படி இறுதியறிக்கையின் படி வழக்கானது விபத்தானது இறந்து போன கலையரசன் என்பவர் கவனக்குறைவால் ஏற்பட்டதால் ஏற்படும் Charge abated என முடிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் தயார் செய்யப்பட்ட மாதிரி வரைபடத்தில் உண்மை நகல் சா.சா.ஆ. 2. TN 33 Y 0963 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் உண்மை நகல் சா.சா.ஆ.3. மேற்படி வழக்கின் புலன் விசாரணையின் வழக்கு நாட்குறிப்பு உண்மை நகல் சா.சா.ஆ.4.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கில் நான் புலன் விசாரணை மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். விபத்து நான்கு வழி சாலையில் நடந்தது என்றால் சரிதான். மேற்படி விபத்து நடந்த இடத்தில் வடபுற மற்றும் தென்புறம் ஆகிய இடங்களில் இரண்டு பாலங்கள் உள்ளது என்றால் சரிதான். வடபுற பாலம் பழைய பாலம் என்றாலும் தென்புல பாலம் புதிய பாலம் என்றாலும் சரிதான். பாலத்தில் மேற்கு பகுதியில்

இருந்த தார் அகற்றப்பட்டு அது பயன்பாட்டில் இல்லாமல் இருந்தது என்ற விபரம் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். போக்குவரத்தை மாற்றம் செய்தது தொடர்பாக எந்த விதமான கடிதமும் போலீஸ் துறையால் நெடுஞ்சாலை துறைக்கு வழங்காததால் அது தொடர்பாக இருவருக்கும் கருத்து வேறுபாடு இருந்தது என்று சொன்னால் சரியில்லை.

2. மேற்படி கருத்து வேறுபாட்டின் காரணமாகத்தான் போலீசார் இந்த விபத்து வழக்கில் இறந்து போனவர் மீது தவறு இருப்பதாக கருதி வழக்கை முடித்து வைத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியை விசாரித்தால் தான் யாருடைய கவனக்குறைவால் விபத்து நடந்தது என்பது இறுதியாக தெரியவரும் என்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN
Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.06.13 09:54:49 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.